**ரிதீகம பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ரிதீகம பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரிதீகம பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான நிருவாகத்தினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை

அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(III) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று சபைக்குச் சொந்தமான லிஹினிவெஹெர ஹோலொன்கொள்ளவத்த காணியின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.<br><br>(ஆ) மீளாய்வாண்டினுள் காணி மற்றும் கட்டடங்கள் அகற்றல் ரூபா 630,000 ஆகவிருந்த போதும், அது ரூபா 360,000 என ரூபா 270,000 குறைவாக காட்டப்பட்டிருந்தது.<br><br>(இ) மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று பொது நிதியக் கடன் கொடுத்தோர் ரூபா 17,890,102 ஆகவிருந்த போதும், அது ரூபா 18,890,020 என ரூபா 999,918 கூடுதலாக காட்டப்பட்டிருந்தது.<br><br>(ஈ) மீளாய்வாண்டில் 06 வருமானத் தலைப்புகளின் வருமானம் ரூபா 5,605,450 கூடுதலாகவும் 02 வருமானத் தலைப்புகளின் வருமானம் ரூபா 143,027 குறைவாகவும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டில் சீர் செய்வதற்கான நடவடிக்கை எடுப்பேன் எனத் தெரிவிக்கின்றேன். | சரியாக கணக்குகள் பேணப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (உ) மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று பெற வேண்டிய குத்தகை வருமானம் ரூபா 179,808 கூடுதலாகவும் 02 வருமானத் தலைப்புக்களில் மூலம் கிடைக்கப்பெற வேண்டிய வருமானம் ரூபா 11,322,316 குறைவாகவும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.<br><br>(ஊ) மீளாய்வாண்டில் 02 மூலதனச் செலவுத் தலைப்புகளுடன் தொடர்பான ரூபா 1,359,281 தொகை கணக்கிடப்பட்டிருக்கவில்லை.<br><br>(எ) முன்னைய வருட இறுதியில் பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணத்தை விடவும் மீளாய்வாண்டில் கிடைக்கப்பெற்ற ரூபா 940,375 நீதிமன்றத் தண்டப்பண வருமானம் மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கிடப்படாது திரண்ட நிதியத்தில் வரவிடப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டில் சீர் செய்வதற்கான நடவடிக்கை எடுப்பேன் எனத் தெரிவிக்கின்றேன். | சரியாக கணக்குகள் பேணப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 13,974,496 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 13,117,239 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வீதவரி மற்றும் வரி<br><br>மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று 1655 வீதவரிக் கூறுகளிலிருந்து ரூபா 3,314,754 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நடமாடும் சேவைகள் நடாத்துவதன் மூலம் அறவிடுவதற்கான ஏற்பாடுகளை செய்வதென கணக்காய்விற்கு தயவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். | நிலுவை வீதவரியினை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| வாடகை<br><br>13 கடைகளிலிருந்து ஒரு தடவைக் கொடுப்பனவு (key money) ரூபா 8,576,500 அறவிடப்பட்டிருக்கவில்லை | நிலுவை வாடகையினை அறவிடுவதற்காக வாடகைதாரர்களுக்கு 2022 ஜனவரி 08 மற்றும் 2022 மே 08 திகதிகளையுடைய கடிதம் மூலம் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதுடன், | சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் ஒரே தடவையில் பணத்தை பெற்றுக்கொள்ளல் |

| | | |
|---|---|---|
| | நிலுவைகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் கணக்காய்விற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். | வேண்டும் |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| லிஹினிவெஹெரவில் வசிக்கும் ஒருவர் சட்ட விரோதமாக அமைத்துள்ள ஒரு கட்டடத்திற்கான தண்டப்பணமாக ரூபா 1,170,000 தொகை செலுத்தி திட்டத்திற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு 2014 செப்டம்பர் 16 ஆம் திகதிய கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதும், அத் தண்டப்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | சுபையினால் 2022 ஜனவரி 05, ஜனவரி 21, ஜனவரி 31 திகதிய கடிதங்கள் மூலம் அறிவித்த பின்னர், அவரால் அத் தண்டப்பணத்தைச் செலுத்த முடியாதெனக் குறிப்பிட்டு 2022 ஜனவரி 28 திகதி எழுத்து மூலம் எமக்கு அறிவித்துள்ளார் என்பதையும், அதனடிப்படையில் இக் கட்டடத்தின் திட்டத்திற்கான அனுமதியினைப் பெறல் மற்றும் தண்டப் பணம் செலுத்துதல் தொடர்பாக பொதுச் சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், பொதுச் சபையின் தீர்மாணத்தின் பிரகாரம் அடுத்த நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக கணக்காய்விற்கு தெரிவிக்கின்றேன். | சட்டம், விதிமுறைகளுக்கு அமைவாக திட்டங்களுக்கான அனுமதி பெறப்படாது மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்களுக்கான தண்டப்பணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரிதீகம பிரதேச சபைக்குச் சொந்தமான ரூபா 76,000 பெறுமதியான மரம் வெட்டும் இயந்திரம் 2018 மே 21 ஆம் திகதி முதல் காணாமல் போயிருந்த போதும், அது தொடர்பான நபர்களை இனங்கண்டு ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2021 ஏப்ரல் 21 ஆம் திகதி கொகரல்ல காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், அம் முறைப்பாடு தொடர்பாக பொலிசாரினால் இரு தரப்பினரும் அழைக்கப்பட்டு விசாரனை மேற்கொள்ளப்பட்டு இயந்திரத்தின் பெறுமதியை சபைக்குச் செலுத்துவதற்கு இணக்கம் தெரிவித்திருந்த போதும் அத் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | சபைக்குச் சொந்தமான சொத்துக்கள் காணாமல் போகும் சந்தர்ப்பங்களில் விசாரனை மேற்கொள்ளப்பட்டு நட்டஈடு அறவிடப்படல் வேண்டும். |

## 3.3 வெளிப்படையான முறைகேடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டு உள்ளூராட்சி நிறுவனங்களை வலுப்படுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ் ரூபா 2,032,000 செலவில் சபைக்குச் சொந்தமான 04 டேலர்கள் திருத்தியமைக்கப்பட்டிருந்தன. 03 நிறுவனங்களின் விலைகளின் அடிப்படையில் இத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இது தொடர்பாக குறித்த நிறுவனங்களுக்குச் சென்று நடாத்தப்பட்ட பௌதிக பரிசோதனையின் போது இரண்டு கேள்விதாரர்களுக்கு அனுப்பப்பட்ட விலைகள் அந்த நிறுவனங்களுக்கு கிடைக்கவில்லை எனவும், ஒரு நிறுவனத்தில் விலை விபரங்களின் மதிப்பீட்டு கடித தலைப்பில் அச்சிடப்பட்டிருந்த இலக்கங்கள் அழிக்கும் திரவம் கொண்டு அழிக்கப்பட்டு போலி கடிதத் தலைப்புகள் தயாரிக்கப்பட்டு 04 டிரக்டர் டேலர்களுக்குமான 04 விலைமனுக்கள் தயாரிக்கப்பட்டிருந்ததெனவும் ஒரே வடிவான கையெழுத்து பயன்படுத்தப்பட்டிருந்தமையும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | குறைந்த விலை மனுவை சமர்ப்பித்திருந்த பிரதேச சபையில் பதிவுசெய்யப்பட்டிருந்த ஒரு நிறுவனம் சமர்ப்பித்திருந்த விலைமனுவின் அடிப்படையில் குறித்த திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதென்பதை கணக்காய்விற்குத் தெரிவிக்கின்றேன். | * பொருட்கள், வேலைகள் மற்றும் சேவைகள் கொள்வனவு நடவடிக்கைகளின் போது கொள்வனவு நோக்கங்கள் பூர்த்தியாகும் வகையில் மேற்கொள்ளப்படல் வேண்டம். இம் முறைகேடுகள் தொடர்பில்<br><br>* நிர்வாகக் கோவை விதிமுறைகளின் பிரகாரம் பொறுப்புசக் கூற வேண்டிய அதிகாரிகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டம். |
| (ஆ) | பிரதேச சபைக்கு பொதுத் தேவைகளுக்காக விடுவிக்கப்பட்டுள்ள காணிகள் அக் காணிகளில் வசிக்கின்ற மக்களின் பொது வசதிகளுக்காகவே ஒதுக்கப்பட்டுள்ள போதும், அந்த நோக்கத்திற்கு முறனாக கந்தோருவத்த மடியாவ பொது காணியின் 07ஆம் இலக்க துண்டின் 9.1 பர்சஸ் இடத்தில் அடுத்த காணி உரிமையாளர் வீடொன்றைக் கட்டியுள்ளார். சபையினால் இந்த பர்சஸ் 9.1 காணியை பொதுச் சபையின் தீர்மாணத்தின் பிரகாரம் ஆளுனர் அவர்களின் அனுமதியைப் பெற்று ரூபா 227,000 தொகைக்கு மதிப்பீடு செய்து நீக்குவதற்குத் தீர்மாணித்திருந்தது. | பொதுத் தேவைகளுக்காக 7,08,11 ஆகிய காணித்துண்டுகளிலிருந்து 39.8 பர்சஸ் காணி பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. ஒருவர் சபைக்குச் சொந்தமான 07 ஆம் இலக்க காணித்துண்டின் ஒரு பகுதியும் உள்ளடங்கும் வகையில் வீடொன்றை நிர்மாணித்துள்ளதுடன், பொதுச் சபை தீர்மாணத்தின் பிரகாரம் தடைதாண்டல் மூலம் அனுமதியைப் பெற்று மதிப்பீடு செய்யப்பட்டு பணம் அறவிடப்பட்டு 9.1 பர்சஸ் காணி விடுவிக்கப்பட்டுள்ளது. | பொதுத் தேவைகளுக்காக விடுவிக்கப்பட்டுள்ள காணிகள் அக் காணிகளில் வசிக்கின்ற மக்களின் பொது வசதிகளுக்காகவே ஒதுக்கப்பட்டுள்ளது. அக்காணிகளை மதிப்பீடு செய்து நீக்குவது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | கொடதலுபொதே வத்த காணியின் 26 ஆம் இலக்க 13 பர்சஸ் பரப்புள்ள காணியில் ஒரு வீடு அமைக்கப்பட்டுள்ளது. காணி ஏலவிற்பனையாளர் மூலமே இக் காணி விற்கப்பட்டு பணம் பெறப்பட்டுள்ளதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டுள்ளதுடன், இந்த | இந்த சட்டவிரோத நிர்மாணத்தினை அகற்றுமாறு கூறி எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ள போதும், இதுவரை அகற்றப்படாமை தொடர்பில் பொதுச் சபைக்கு அறிவிக்கப்பட்டு அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்காக உள்ளூராட்சி | பொதுக் காணிகளைப் பாதுகாப்பதற்கு சபை நடவடிக்கை எடுத்தல் வேண்டும். சட்டவிரோத குடியேற்றங்களை அகற்றுவதற்கு ஆவண செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சட்டவிரோத நிர்மாணத்தினை அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆணையாளருக்கு முன்வைக்கப்பட்டுள்ளது என்பதை கணக்காய்விற்கு தெரிவித்துக்கொள்கிறேன். | |
| (ஈ) | வஜிரவத்த ஏலவிற்பனைக் காணியில் பொது நடவடிக்கைகளுக்காக 04 ஏக்கர் 01 ரூட் 2.47 பர்சஸ் காணி வழங்கப்பட வேண்டியிருந்த போதும், 01 ரூட் 3.9 பர்சஸ் குறைவாக வழங்கப்பட்டிருந்ததுடன், இக் கேள்விக் காணிக்கான காண் தொகுதி காணப்படாமை, நீர் வசதி மற்றும் மின்சார இணைப்பு வழங்கப்பட்டிருக்கவில்லை. பாதைகள் காபட் இடப்பட்டு செப்பனிடப்படாதிருந்த போதும் சபையின் அதிகாரிகள் எந்தவித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | சபைக்கு கிடைக்க வேண்டிய காணியின் அளவான 04 ஏக்கர் 01 ரூட் 2.47 பர்சஸ் காணி அளவு சீர் செய்யப்பட்டுள்ளதெனவும், இக் காணி ஏலமானது தவறுகள் மற்றும் குறைபாடுகள் கொண்டதாகவுள்ளதால் காணியின் துண்டாக்கல் திட்டம் இதுவரை அனுமதிக்கப்படாதுள்ளதென்பதையும் கணக்காய்விற்குத் தெரிவிக்கின்றேன். | குாணி ஏலவிற்பனை அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சபைக்கு கையளிக்கப்பட வேண்டிய காணியை முறையாகப் பெற்று அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்ததன் பின்னர் இணக்கச் சான்றிதழ் பெற்றுக் கொடுக்கப்பட்டதன் பின்னர் காணித் துண்டுகளை விற்பனை செய்வதற்கான அனுமதி வழங்கப்படல் வேண்டும். |